**அனுப்புநர்**
திரு.ப்பி. லீலா அலெக்ஸ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர்.

**பெறுநர்**
1.மாவட்ட காவல் கண்காணிப்பாளர்
வேலூர்.
2. இணை இயக்குநர்,
பொது சுகாதாரத் துறை,
வேலூர்.
3. முதன்மை கல்வி அலுவலர்
வேலூர்.
4. நியமன அலுவலர்,
உணவு பாதுகாப்பு துறை வேலூர்.
5. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
வேலூர்.

ந.க.தே2/ 347/2026,  நாள்:  .06.2026.

அய்யா,

**பொருள்:** மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை– போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு – போதைபொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தல் – மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இது தொடர்பான அறிமுகப் நிகழ்ச்சி (Orientation Programme) நடத்துவது – தொடர்பாக.

**பார்வை:** அரசு கூடுதல் தலைமை செயலாளர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சென்னை அவர்களின் நேர்முக கடிதம் எண்.D.O.15670/H.P&E (XVI) 2026–1, நாள்: 03.06.2026.

******

பார்வையில் காணும் கடிதத்தின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வையில் காணும் கடிதத்தில், போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு போதைபொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும், 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, இது தொடர்பான அறிமுக நிகழ்ச்சி (Orientation Programme) நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

எனவே, அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் அனைத்திலும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துவதில் போதைபொருள் தடுப்பு மன்றங்களின் பள்ளி ஒருங்கிணைப்பாளர்களை ஈடுபடுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அறிமுகப் நிகழ்ச்சி (Orientation Programme) வருகின்ற 16.06.2026 அன்று காலை 9.30 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமயில் நடைபெறவுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள அணைத்து துறை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மாணவர்களை போதை பழக்கத்திலிருந்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சம்மந்தப்பட்ட துறையின் சார்பாக சொற்பொழிவுகள் மற்றும் கலந்துரையாடல் நடத்த ஏதுவாக கூட்டத்தில் கலந்து கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
வேலூர் மாவட்டம்.

**நகல்:** கோட்ட கலால் அலுவலர், வேலூர் – சம்மந்தப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியருடன் ஒருங்கிணைந்து நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டியது.

12/6/26